IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
RLT.OP.No.10/2021
DEPOSITION OF WITNESS (RW1)

ஆரம்ப நேரம்: 12.15 PM.

எ.ம.சா. 1 சாட்சி முருகன் த.பெ. ஆறுமுகம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 09.10.2025 in accordance with the provisions of Act XX141.**

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. நானும் எனது தகப்பனாரும் வழக்கு சொத்தின் உரிமையாளரான மனுதாரருடன் எவ்விதமான வாடகை ஒப்பந்தமும் எழுதிகொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். எனது வழக்கறிஞர் கேட்கும் போது கொடுப்பேன். தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கேட்டு சொல்கிறேன்.

2. நானும் எனது தகப்பனாரும் மனுதாரருடன் உண்மையில் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திகொள்ளாமல் ஏற்படுத்திகொண்டதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டிருந்தால் அந்த வாடகை ஒப்பந்தத்தை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் அது வாய்மொழி ஒப்பந்தம் என்பதால் தாக்கல் செய்யவில்லை.

3. மேற்படி வாடகை ஒப்பந்தம் எழுத்துபூர்வமாக ஏற்படுத்திகொள்ளாமலும் வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்யாமலும் இருப்பதாலும் வாடகைதாரராக இருக்க எனக்கு உரிமையில்லை என்றாலும் வழக்கு சொத்தில் இருந்து சட்டப்படியும், நியாயப்படியும் வெளியேற வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 12.20 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.09 10:42:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.